**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்:341** **நாள்:29.07.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் சொத்து உரிமையாளர்களிடமிருந்து நிலுவை சொத்து வரி வசூலிப்பதற்கான சிறப்பு முகாம் 31.07.2026 வரை நடைபெருகிறது.**

**03.07.2026 முதல் இன்று (29.07.2026) வரை ரூ.157.39 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.**

**நிலுவை சொத்து வரியினை செலுத்தாதவர்கள் வருகின்ற 31.07.2026க்குள் செலுத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

பெருநகர சென்னை மாநகராட்சி பிரதான வரி வருவாயாக சொத்துவரி உள்ளது. இதன் மூலமே, சென்னை மாநகருக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்புகள், குப்பை திடக்கழிவுகள் அகற்றுதல், தெரு விளக்குகள், பூங்காக்கள் மற்றும் சாலைகள் பராமரித்தல், பொது சுகாதாரம் நோய்த்தடுப்புப் பணி போன்ற அத்தியாவசியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் சொத்து வரி வசூலிப்பதற்கான சிறப்பு முகாம் 03.07.2026 முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதனைத் தொடர்ந்து, 03.07.2026 முதல் நடைபெற்று வரும் சிறப்பு முகாம்களில் சொத்து உரிமையாளர்கள் தாமாக முன்வந்து, நிலுவை மற்றும் நடப்பு சொத்துவரி செலுத்தியதன் காரணமாக 03.07.2026 முதல் இன்று (29.07.2026) வரையிலான காலத்தில், ரூ. 157.39 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. 31.07.2026 வரை நடைபெறும் இந்த சிறப்பு முகாமில் சிறப்பு தீவிர வசூல் (Special Intensive Collection) பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நிலுவை சொத்து வரியினை செலுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இன்று (29.07.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு-61க்குட்பட்ட எழும்பூரில் உள்ள சவுத் இந்தியா ஹோட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட் (South India Hotels pvt ltd) என்ற நிறுவனம் 2026-27ஆம் ஆண்டிற்கான தொழில் உரிமம் புதுப்பிக்காமலும், சொத்துவரி நிலுவைத் தொகை ரூ.8,38,850/- செலுத்தாத காரணத்தினாலும் மாநகராட்சி அலுவலர்கள் மூலம் நோட்டீஸ் ஒட்டப்பட்டு, பூட்டி சீல் வைக்கப்பட்டது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-133க்குட்பட்ட தியாகராயநகர், உஸ்மான் சாலையில் உள்ள வேலவன் ஸ்டோர்ஸ் சில்க்ஸ் பிரைவேட் லிமிடெட் (Velavan Stores Silks pvt ltd ) என்ற நிறுவனம் சொத்துவரி நிலுவைத் தொகை ரூ.15,91,494/- செலுத்தாத காரணத்தினால் மாநகராட்சி அலுவலர்கள் மூலம் பூட்டி சீல் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்நிறுவனம் முழு சொத்துவரி நிலுவைத் தொகையினை செலுத்தியதால் மாநகராட்சி அலுவலர்கள் மூலம் திறந்து வைக்கப்பட்டது.

எனவே, நிலுவை சொத்து வரியினை செலுத்தாதவர்கள் 31.07.2026க்குள் செலுத்தி அபராதவட்டியினையும், மேல்நடவடிக்கையினையும் தவிர்த்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**